**நாள்: 14.11.2024**

**O.S. No. 93/2023**

**வா.சா.1**

**பெயர்: லெட்சுமி, க/பெ. தனராசு**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

வா.சா.ஆ.1 ஆவணம் தாவா சொத்திற்கான குத்தகை உரிமை பதிவேடு என்றால் சரிதான். எனது மாமனார் குப்பான் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான். கடந்த 29.01.2023 ம் தேதியன்று கொரடாச்சேரி காவல்நிலையத்தில் நான் புகார் அளித்து அதற்காக வழங்கப்பட்ட மனு ரசீது தான் வா.சா.ஆ.4 என்றால் சரிதான். புகாரின் நகல் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி, 2 ம் பிரதிவாதிக்கு விற்க முயற்சி செய்ததாக சொல்லி தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால், 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பெயரில் தான் 2ம் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை. இதற்கு முன்பு எனது கணவர் தான் சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் வேலை பார்த்து வருகிறார். 1ம் பிரதிவாதியின் சகோதரர் என்ற முறையில் எனது கணவர் வழக்கு சொத்தை பராமரித்து சாகுபடி செய்து வந்தார் என்றால் இல்லை. எனது கணவர் சாகுபடி செய்ததற்கு எருக்காட்டுர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனது பெயரில் கடன் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள முன் தடை மனு என்னால் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முன்தடை மனுவில் நூர்ஜகானுக்கு சொந்தமானது போலவும், அதில் குத்தகை சாகுபடி செய்து வருவதாக சொல்லி தான் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உயில் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா நிலத்திற்கு குத்தகை உரிமை பதிவேட்டில் எனது பெயருக்கு ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா

என்றால் இல்லை. 1990 ல் எனது மாமனார் பெயரில் வழக்கு சொத்து கிரயம் பெறப்பட்டதாக சொல்லியுள்ளதற்கு அந்த கிரய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. அது எந்த தேதியில் கிரயம் வாங்கப்பட்டது என்று முழுமையாக தேதி, மாதம் குறிப்பிடாமல் வருடம் மட்டுமே வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் பெயரில் வாங்கியதாக சொல்வதற்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது மாமனார் உயில் எழுதி வைத்ததாக சொல்வதற்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. உயில் மூலமாக எனக்கு ஒரு காலனி வீடும் எழுதி வைக்கப்பட்டுள்ளதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த காலனி வீட்டிற்கு எனது மாமனார் பெயரில் தான் பட்டா உள்ளது. வீட்டுவரி ரசீது எனது பெயரில் செலுத்தப்படுகிறது. மேற்படி காலனி வீடு எனது பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு நாட்களாக எனது பெயரில் வீட்டுவரி ஏற்படுகிறது என்றால் எனது மாமனார் இறந்த பின்னிட்டு எனது பெயரில் ஏற்படுகிறது. அதற்கு முன்புவரை எனது மாமனார் பெயரில் வீட்டுவரி ஏற்பட்டது. எனது மாமனார் குடியிருந்த வீட்டில் நானும், எனது கணவரும் வசித்து வருகிறோம் என்பதாலும், 1ம் பிரதிவாதி வசிக்கவில்லை என்ற காரணத்தினாலும் வீட்டுவரி எனது பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள வீடு எனது மாமனாருடையது என்பதால் 1ம் பிரதிவாதிக்கும் அதில் உரிமை உள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் குத்தகை சாகுபடி செய்ததால் 1ம் பிரதிவாதிக்கும் அதில் குத்தகை உரிமை உண்டு என்றால் சரிதான். நில உரிமையாளரை வழக்காடியாக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவரை பார்த்ததே இல்லை. 09.04.1986 ல் 1ம் பிரதிவாதி நில உரிமையாளரிடம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி அதற்காக அட்வான்ஸ் தொகை கொடுத்து அதுமுதல் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில்

இருந்து வந்ததை சகோதரர் என்ற முறையில் தான் எனது கணவருக்கு குத்தகைக்கு 1ம் பிரதிவாதி அனுமதித்தார் என்றால் இல்லை. 2009 ம் வருடம் முதல் 2022 ம் வருடம் வரை எனது கணவர் சாகுபடி செய்து வந்தார் என்றாலும், அதற்கு பின்னிட்டு எனது கணவர் நிலத்தை 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைத்துவிட்டார் என்றாலும், அதன் காரணமாக இந்த வழக்கானது நிலைக்கத்தக்கல்ல என்றாலும் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி வசம் எனது கணவர் தாவா நிலத்தை ஒப்படைத்த காரணத்தினால் நிலத்தை தரிசாக போட வேண்டாம் என்ற எண்ணத்துடன் 2ம் பிரதிவாதிக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. வழக்கு சொத்து எனது பெயருக்கு உயில் எழுதி வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மூன்று நபர்களுக்கும் சொத்தில் உரிமை உண்டு. நில உரிமையாளரிடமிருந்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டது 1ம் பிரதிவாதி தனித்த பெயரில் இல்லாமல் சகோதரர்களுக்கும் சேர்த்து தான் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் இல்லை. வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றாலும் சரியல்ல. நான் சொத்துக்களை முழுமையாக அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எனது கணவர் பெயரில் தாக்கல் செய்யாமல் என் மூலமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒம்/- S. விஜய்ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருவாரூர்.